# AL - MARJAN MUSLIM LADIES COLLEGE

STR/AL-MARJAN M.L.C.
SAMMANTHURAI


## SAMMANTHURAI

# EDUCATIONAL TOUR 1999

**19 - 07 - 1999 --- 24 - 07 - 1999**

# STR / AL - MARJAN MUSLIM LADIES COLLEGE, SAMMANTHURAI.

# EDUCATIONAL TOUR - 1999




1. சம்மாந்துறை
௨. அம்பாறை
3. மகாஓயா
4. மஹியங்கனை
5. பொலந்நறுவை
6. தம்புல்ல
7. நீர் கொழும்பு
8. கொழும்பு
9. கண்டி
10. நுவரெலியா
11. பண்டாரவளை
1௨ இங்கினியாகலை

## TOUR ORGANISING COMMITTEE

| | | | |
|---|---|---|---|
| MR. | S. H. M. | MUSTHAFFA | - PRINCIPAL |
| MR. | K. M. S. M. | THAMEEM | - D. PRINCIPAL |
| MR. | M. I. M. | HAMZA | - D. PRINCIPAL |
| MR. | N. M. M. | FUARD | - PRESIDENT |
| MR. | A. | ABDEEN | - SECRETARY |
| MR. | M. B. | MOHAMED YEESUFU | - TREASURER |
| MR. | K. M. | MUSTHAFFA | - CO- ORDINATOR |
| MR. | A. L. M. | JABAIR | - MEMBER |
| MR. | S. L. | MANSOOR | - ,, |
| MR. | P. | ISMAIL | - ,, |
| MRSS | A. | KATHEEJA UMMAH | - ,, |
| MRS | A. L. | HILUFA | - ,, |
| MRS. | F. R. M | RAYEES | - ,, |
| MRS. | S. R. A. | RASHEED | - . |

## SOUVNIER ORGANISERS

| | | |
|---|---|---|
| MR. | A. L. M. | JABIR |
| MR. | M. B. | MOHAMED YEESUFU |
| MR. | A. | IBRAHIM |

11. பிரயாணத்தின் போது ஏற்படும் திடீர் சுகவீனங்களை உடன் ஆசிரியரின் கவனத்திற்குக் கொண்டு வருதல் வேண்டும்.

12. நீங்கள் உண்ணும் உணவில் கூடிய கவனம் எடுக்க வேண்டும். இல்லாவிடில் உடல் அசௌகரியங்கள் ஏற்படலாம்.

13. பஸ்வண்டியை எந்த நேரமும் சுத்தமாகவும் புனிதமாகவும் வைத்திருக்க முயற்சிகளை மேற் கொள்ளவும்.

14. தனது உடமைகளைப் பாதுகாப்பாக வைத்திருப்பதுடன் சக மாணவிகளின் உடமைகளுக்கும் பாதுகாப்பாக இருக்கவும்.

15. இரவில் தங்குமிடங்களையும் அங்குள்ள பொருட்களையும் பாதுகாப்புடன் தனது பொருட்களையும் பாதுகாப்பாக கையாண்டு ஒழுங்குபடுத்திக் கொள்ள வேண்டும்.

16. இரவில் தூங்கும் போதும் மற்ற நேரங்களிலும் சக மாணவிகளுக்கு இடை இன்றி நடந்து கொள்ள வேண்டும்.

17. நீங்கள் வழக்கமாகப் பாவிக்கும் மாத்திரைகளையும் மருந்துகளையும் தவறாமல் கொண்டு வந்து கிரமமாகப் பாவிக்கவும்.

18. தனது பொருட்களுக்கு தாமே முழுப் பொறுப்பு என்பதால், அவரவர் பொருட்களை கவனமாகப் பாதுகாத்துக் கொள்ளவும்.

19. சகல வகையிலும் அடுத்தவருடன் ஒற்றுமையாகவும் சகோதர பாசத்துடனும் நடந்து கொள்ளவும்.

20. பிரயாணம் முடியும் வரை சகலரும் மிகப் பணிவாகவும், கீழ்ப் பணிவுடனும் நடந்து ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து நன்மதிப்பினையும் பெற்றுக் கொள்ளுமாறு வேண்டப்படுகின்றீர்கள்.

21. பெறுமதிமிக்க ஆபரணங்களை அணிவது கண்டிப்பாகத் தவிர்க்கப்படல் வேண்டும்.

| திகதி | இருந்து | வரை | தரிசிக்கும் இடங்கள் |
|---|---|---|---|
| 19.07.1999 | அல்- மர்ஜான் மு. ம. கல்லூரி<br>மஹா ஓயா<br>தெஹியத்தக் கண்டிய | மஹா ஓயா<br>தெஹியத்தக்கண்டிய<br>பொலந்நறுவை | வெண்னீர்க் கிணறுகள்<br>அபிவிருத்திப் பிரதேசம்<br>கட்டிப்பால் தொழிற்சாலை<br>பிரதான நகரம்<br>பராக்கிரம சமுத்திரம்<br>தங்குமிடம் - கதுறுவெல<br>முஸ்லிம் மஹாவித்தியாலம் |
| 20.07.1999 | பொலந்நறுவை<br>மின்னேரியா<br>சிகிரியா<br>தம்புல்ல<br>குருநாகல் | மின்னேரியா<br>சிகிரியா<br>தம்புல்ல<br>குருநாகல்<br>நீர்கொழும்பு | மின்னேரியாக் குளம்<br>சிகிரியாக் குன்று<br>தம்பல்லக் குகை<br>அபிவிருத்திப் பிரதேசம்<br>மட்பாண்டக் கூட்டுத்தாபனம்<br>மீன் பிடித்தளம்<br>தங்குமிடம் - அல்- ஹிலால் மத்திய கல்லூரி |
| 21.07.1999 | நீர் கொழும்பு<br>கட்டு நாயக்க<br>சீதுவை<br>வெலிசர | கட்டு நாயக்க<br>சீதுவை<br>வெலிசர<br>கொழும்பு | விமான நிலையம்,<br>சுதந்திர வர்த்த வலையம்<br>சிலோன் அக்ரோ லிமிட்<br>எக்ஸ்பிறே லிமிட்<br>ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்<br>கோள் மண்டலம், பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வ தேச மாநாட்டு மண்டபம்,<br>மிருகக் காட்சிச் சாலை |

| திகதி | இருந்து | வரை | தரிசிக்கும் இடங்கள் |
|---|---|---|---|
| | | | ஆர்பிகோ லிமிட்டட், தினக்கு ரல் செய்தித்தாள் நிறுவனம் |
| | கொழும்பு | மாபொல | தங்குமிடம் மாபொல ஜும்மா பள்ளிவாசல் |
| 22. 07. 1999 | மாபொல | கொழும்பு | விக்டோரியாப் பூங்கா நகர மண்டபம் வானிலை அவதான நிலையம், கலா பவனம் தேசிய நூதன சாலை சுதந்திர சதுக்கம் பழைய பாராளுமன்றம் புதிய பாராளுமன்றம் துறைமுகம். |
| | கொழும்பு | கேகாலை | யானைகள் சரணாலயம் |
| | கேகாலை | கடுகண்ணாவை | குடைத் தொழிற்சாலை |
| | கடுகண்ணாவ | மடவல | தங்குமிடம் :- மதீனா மத்திய கல்லூரி |
| 23. 07. 1999 | மடவல | பொல்கொல்லை | நீர்த்தேக்கம் |
| | பொல்கொல்லை | கண்டி | கண்டி வாவி தலதா மாளிகை |
| | கண்டி | பேராதனை | பேராதனைப் பூங்கா பேராதனைப்பல்கலைக்கழகம் |
| | பேராதனை | கொத்மலை | கொத்மலைத் திட்டம் |
| | கொத்மலை | நுவரெலியா | நுவரெலியாப் பூங்கா |
| | நுவரெலியா | ஹக்கல | ஹக்கலப் பூங்கா |
| | ஹக்கல | பண்டாரவளை | தங்குமிடம் :- தர்மபால மஹாவித்தியாலயம் |

| திகதி | இருந்து | வரை | தரிசிக்கும் இடங்கள் |
|---|---|---|---|
| 24.07.1999 | பண்டாரவளை | | தேயிலைத் தொழிற்சாலை |
| | பண்டாரவளை | பதுளை | துங்கிந்த நீர் வீழ்ச்சி |
| | பதுளை | இங்கினியாகலை | சேனாநாயக்க சமுத்திரம் மின்உற்பத்தி நிலையம் |
| | இங்கினியாகலை | அம்பாரை | சம்மாந்துறை |

## தரிசிக்கும் இடங்கள் பற்றிய சுருக்கமான தகவல்கள்

**1ம் நாள் - 1999. 07. 19.**

**மஹாஓயா** :- இங்கு வென்னீர் ஊற்றுக்கள் காணப்படுகின்றது. அங்கு ஒரே இடத்தில் அமையப் பெற்றுள்ள 7 சிறிய கிணறுகளி லிருந்து வேறுபட்ட வெப்ப நிலையையுடைய நீரின் தன் மைகளை அறியலாம்.

**தெஹியத்தகண்டிய** :- இது ஒரு அபிவிருத்திப் பிரதேசமாகும் இங்கு ஒரு மைய நகரைச் சுற்றி பல சிறிய கிராமங்கள் அமையப் பெற்றுள்ளது.

**பொலன்நறுவை** :- இலங்கையின் புராதன தலை நகரங்களில் அனுராதபுரத்துக்கு அடுத்ததாக விளங்குவது. (1017 - 1235) இதனை இரா ஜதானியாகக் கொண்டு ஆட்சி செய்த மன்னர்களுள் மகாபரா க்கிரபாகு முக்கிய இடத்தை வகிக்கின்றான். 1ம் பராக் கிரமபாகு, 1ம் விஜயபாகு, நிஸங்கமல்லன் போன்றவர்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றனர். பௌத்த கலாச்சாரத்தினைப் பிரதிபலிக்கின்ற விகாரைகளும் தூபிகளும் ஏனைய மதத் தவர்களின் வணக்கஸ்தலங்களும் இங்கு காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

1ம் பராக்கிரம பாகுவினால் அமைக்கப்பட்ட தெமலமகாசாய தூபியே மிகப் பெரியதாகும். இதனையடுத்து கிரிவிகாரையும் நிஸ்ஸங்க மல்லனினால் கட்டப்பட்ட றன்கொதவிகாரையும் குறிப்பிடத்தக்கது. இக் காலத்தில் பெயர் பெற்ற சிலை மனைகளுள் தூபராமை, லங்காதிலக்க, திபங்க ஆகியவை புத்தரின்சிலை களை வைப்பதற்கென்றே உருவாக்கப்பட்ட மனைகளாகும். வட்டமனை எனப்படும் எண்கோண மண்டபம் பொலன்நறுவையில் காணப்படும் மதசம்பந்தமான கட்டிடங்களுள் முக்கியமான தொன்றாகும். சந்திர வட்டக்கல், சபா மண்டபம், கல்விகாரை என்பனவும் முக்கிய அம்சங்களாகும்.மகா பராக்கிரமபாகு காலத்தில் தோப்ப வாவிய்யும், தும்புதுறு வாவியையும் ஒன்றாக இணைத்து இன்று காணப்படும் மகா பராக்கிம சமுத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. பொலன்நறுவைப் பிரதேசம் அண்சம வெளிப்பகுதியாகும். இங்குள்ள இயற்கைத் தாவரங்கள் தாழ்நில உலர் வலயக் காடுகளாகும். இலங்கையின் நெல்விளைச்சலில் முதன்மை பெறுகின்ற மாவட்டங்களுள் பொலநறுவையும் ஒன்றாகும். கட்டிப்பால் தொழிற்சாலையும் அமையபபெற்றுள்ளது.

__2ம் நாள் –1999. 07. 20__

__மின்னேரியா__ :- அனுராதபுர கால அரசர்களுள் மகாசேனன் பிரசித்தி வாய்ந்தவன் இவன் 16 குளங்களையும் ஒரு கால் வாயையும் கட்டினான். இவற்றில் மின்னேரியாக் குளம் மிகவும் சிறப்புற்றதாக இன்னும் விளங்குகின்றது. இதனால் மக்கள் மகாசேனனை மின்னேரியாவின் தந்தை அல்லது மின்னேரியாத் தெய்வம் என அழைக்கின்றார்கள்.

__சிகிரியா__ :- காசியப்பன் மன்னன் பாதுகாப்பு நலன் கருதி சிகிரியாவைத் தலைநகராகத் தெரிவு செய்தான். இந்தியாவிலுள்ள அஜந்தா ஓவியத்திற்கு நிகரான ஓவியக்கலையை சிகிரியாக் குகையில் காணலாம்.

**தம்புல்ல** :- கி. மு. 1ம் நூற்றாண்டில் இலங்கையில் மன்னனாக இருந்த வட்ட காமினி அரசன் தம்புல்ல குகையினை விகாரைகளாக மாற்றியதாக வரலாறு கூறுகின்றது. பின்னர் 12ம் நூற்றாண்டில் ஆட்சி செய்த நிஸ்ஸங் கமல்லன் தம்புல்ல குகைகளை அழகு பெறச் செய்தான். பிரதான குகையில் காணப்படும் உடல்வன், சாமன் உருவங்கள் நிஸ்ஸங் கமல்லனின் காலத்தவைகளாகும். இக்குகைளகளில் பல முக்கிய கல்வெட்டுக்களும் காணப்படுகின்றன.

**குருநாகல்** :- பொலநறுவைக்குப் பின்பு பாதுகாப்பு நலன் கருதி இடமாற்றப்பட்ட தலை நகரங்களில் குருநாகல் இராஜதானியும் ஒன்றாகும். அன்னிய படை எடுப்பே இதற்கான முக்கிய காரணமாகும். இன்று புத்தளம், குருநாகல் மாவட்டங்களை தன்னகத்தே கொண்ட வட மேல் மாகாணத்தின் தலை நகராகவும் விளங்குகின்றது. இலங்கையில் நெற்செய்கைகளிலும் தேங்காய் உற்பத்தியிலும் முதன்மை பெறுகின்ற மாவட்டம் குருநாகல் ஆகும்.

**நீர் கொழும்பு** :- இங்கு பீங்கான் தொழிற்சாலை அமைந்துள்ளது. அலையில்லாத கடலும் ஆழமற்ற கடற்பரப்பும் மீன்பிடித் தொழிலுக்கு வாய்ப்பாக அமைந்துள்ளது.

**3ஆம் நாள் - 1999. 07. 21**

**கட்டுநாயக்க** :- இங்கு சர்வதேச விமான நிலையம் அமைந்துள்ளது. இந் நிலையம் நவீன வசதிகளுடன் கூடியதாக காணப்படுவதினால் உலகின் பல நாடுகளின் வான் பயணங்களை மேற்கொள்ளும் விமானங் களுக்கு எரிபொருள் நிரப்பும் மத்திய நிலையமாகவும் தற்காலிக தங்குமிட வசதிகளைக் கொண்ட ஒரு நிலையமாகவும் செயற்பட்டு வருகின்றது இதற்கு பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைம் என இன்று பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. சுதந்திர வர்த்தக வலையம் அல்லது முதலீட்டு ஊக்குவிற்பு வலையம் கட்டுநாயக்காவில் காணப்படுகின்றது. ஆரம்பத்தில்

1978 இல் 14ஆம் இலக்க சரத்துக்கு அமைய பாரிய கொழும்புப் பொருளாதார ஆணைக்குழுவே இவ்வலையங்களை நிர்வகித்து வந்தது. 1992 இல் கொண்டு வரப்பட்ட சட்டமொன்றின் மூலம் மேற்குறிப்பிட்ட ஆணைக்குழு கலைக்கப்பட்டு இலங்கை முதலீட்டு சபை ஒன்று உருவாக்கப்பட்டது. இவ்வமைப்பே இன்று சுதந்திர வர்த்தக வலயங்களை நிருவகித்து வருகின்றது. 1978 இல் கட்டுநாயக்காவில் நிறுவப்பட்டது போன்று 1991 பியகமயிலும், 1993 இல் மிகிந்தலையிலும், 1991 இல் கொக்கலையிலும், 1994 இல் பள்ளேகலயிலும் சுதந்திர வர்த்தக வலயங்கள் நிறுவப்பட்டது.

**கொழும்பு :-**

10. சிறிலங்கா அக்ரோ லிமிடட் (பிறிமா தொழிற்சாலை) :-
இங்கு கோதுமை மாவைப் பயன்படுத்தி நூடில்ஸ் மற்றும் உணவுப் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுவதோடு நவீன இயந்திர சாதனங்கள் மூலம் கோழியிறைச்சி பொதியிடல் என்பன நடைபெறுகின்றன.

02. இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
03. கோள் மண்டலம் :-
இது அண்ட வெளியில் இயற்கைக் கோள்களின் பிரயாணப் பாதையை தத்ரூபமாக செயற்கை வடிவமைப்பில் விளக்கும் நிலையமாகும்.
04. பண்டார நாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபம் :-
முன்னாள் பிரதமர் அமரர் திரு SWRD பண்டார நாயக்க அவர்களின் ஞாபகார்த்த மாக சீன அரசினால் அன்பளிப்பாக கட்டி வழங்கப் பட்டதாகும்.
05. மிருகக் காட்சிச் சாலை :-
இலங்கையில் காணப்படுகின்ற மிருகக்காட்சிச் சாலைகளில் முதன்மையானதும் முக்கியமானதுமாகும்.

இது தெஹிவளையில் உள்ளது. :-

06. லக்ஸ்பிறே லிமிட் – வெலிசர :-

07. ஆர்பிகோ லிமிட் – மகரகம :-

08. தினக்குரல் செய்தித்தாள் நிறுவனம் :-

**04 ம் நாள் – 1999. 07. 22**

கொழும்பு, களுத்துறை, கம்பஹா மாவட்டங்களை உள்ளடக்கிய மேல் மாகாணத்தின் தலை நகரமாகும்.

01. விக்டோறியாப் பூங்கா :-
இப்பூங்கா விகார மகா தேவியின் ஞாபகார்த்தமாக அமைக்கப்பட்டது.

02. நகர மண்டபம் :-
இது ஐக்கிய அமெரிக்காவில் அமைந்துள்ள வெள்ளை மாளிகையின் தோற்றத்தை ஒத்தது.

03. கலாபவனம்

04. தேசிய நூதன சாலை
இலங்கையின் புராதன மன்னர்களினதும் மக்களினதும் கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பிரதிபலிக்கும் சின்னங்களையும், ஆக்கங்களையும் கண்டுகளிப்பதற்காக அவற்றைத் தொகுத்து வைத்துள்ள ஒரு நிலையமாகும். மேலும் வேறு அரும் பொருட்களும் காணப்படுகின்றது. இக் கட்டிடமும் காணியும் முஸ்லீம் பெரியார்களில் ஒருவரான ஜனாப் மாக்கான் மாக்கார் அவர்களால் அன்பளிப்பாக வழங்கப்பட்டது. இதனால் இவரின் வேண்டுகோளுக்கிணங்க வாரந்தோறும் வெள்ளிக் கிழமை இந் நூதனசாலை மூடப்படுவது வழக்கமாகும்.

05. சுதந்திர சதுக்கம்
அன்னியர்களிடமிருந்து எமது நாட்டுக்கு சுதந்திரம் கிடைத்த பிரகடனம் இங்குதான் செய்யப்பட்டது. அத்துடன் தேசிய வீரர்களின் மரணச் சடங்குகளும் இங்கு நடைபெறுவது மரபாகும்.

06. பாராளுமன்றம்

நாட்டின் சட்டங்களை இயற்றும், மாற்றும், இல்லாமல் செய்யும் அதியுயர் சபையாகும். இங்கு மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளும், கட்சிகளுக்குக் கிடைக்கின்ற வாக்குகளின் அடிப்படையில் கிடைக்கப்பெற்ற மேலதிக (போனஸ்) பிரதிநிதிகளும் ஒன்று கூடும் இடமாகும். இது கோட்டே சிறிஜெயவர்த்தன புரவில் அமைந்துள்ளது. இப் புதிய பாராளுமன்றம் நவீன வசதிகளுடன் ஜப்பானிய அரசினால் கட்டி வழங்கப்பட்டடதாகும்.

**07. துறை முகம்** :-

இலங்கையில் மிகமுக்கிய செயற்கைத் துறைமுகமாகும். அதிகளவு ஏற்றுமதி இறக்குமதி நடவடிக்கைகளில் ஈடுபடும் துறைமுகமாகவும் காணப்படுகின்றது. தற்போது இக் கொழும்புத் துறைமுகம் மேலும் விரிவுபடுத்தப்பட்டு புனரமைக்கப்பட்டுள்ளது

**05 ம் நாள் - 1999. 07. 23**

**கண்டி** :-

கண்டி நுவரெலியா, மாத்தளை ஆகிய மாவட்டங்களை உள்ளடக்கிய மத்திய மாகாணத்தின் தலைநகராகும். இங்கு பௌத்தர்களின் பிரதான வணக்கஸ்தலமான தலதா மாளிகை காணப்படுகின்றது. இதற்கு அருகாமையில் "பூசினியாள் வாவி" எனப்படும் கண்டி வாவியும் காணப்படுகின்றது. இலங்கையின் மலையகப் பகுதியை ஆட்சி செய்த இறுதி சுதேச மன்னன் சிறி விக்ரம ராஜ சிங்க கண்டியில் செங்கடகலையைத்தான் தலைநகராக வைத்திருந்தான். கண்டிப் பிரதேசம் இயற்கைப் பாதுகாப்பு அரண்களையும் எழில் மிகு இயற்கைக் காட்சிகளையும் கொண்ட பகுதியாகும். நகரின் மத்தியில் அமைந்துள்ள மத்திய சுப்பர்மார்க்கட்டும் இந்நகரை அழகுபடுத்துகின்றது.

**பேராதனை** :- இலங்கையில் 1942 ம் ஆண்டு அமையப்பெற்ற முதலவது பல்கலைக்கழகமும், இயற்கை வனப்புமிகு மிகப் பெரிய தாவரவியல் பூங்காவும் மலை நாட்டுக்கான முக்கிய புகையிரதச் சந்தியும் இங்கு காணப்படுவதோடு இலங்கையின் மிக நீளமான மகாவலி கங்கையும் இப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்கின்றது.

**கொத்மலை** :- கொத்மலை ஓயாவுக்குக் குறுக்கே "கடதொற" எனும் இடத்தில் ஒரு அணையைக் கட்டியே கொத்மலை நீர்த் தேக்கம் அமைக்கப்பட்டது. நாட்டின் மின்சாரத் தேவையில் கணிசமான அளவு பங்களிப்புச் செய்கின்றது. இத்திட்டத்துக்கு சுவீடன் நாடு உதவியளித்துள்ளது. இலங்கையில் காணப்படுகின்ற ஒரேயொரு தரைக்கீழ் மின்பிறப்பாக்கி நிலையம் இங்குதான் காணப்படுகின்றது.

**நுவரெலியா** :- இங்குள்ள பூங்கா பலரையும் கவரக்கூடியது. இலங்கையின் பொருளாதாரத்தில் கூடிய பங்களிப்புச் செய்கின்ற உயர் நிலத் தேயிலையும் இங்குதான் பயிராகிறது. 1950 M க்கு மேல் அமைந்துள்ள நுவரெலியாவில் குதிரைப்பந்தயத்திடல் நகரை மெருகூட்டிக் கொண்டிருக்கின்றது. இங்கு ஜனாதிபதியின் கோடை கால வாசஸ் தலமும் அமையப் பெற்றுள்ளது. வசந்த காலமாக ஏப்ரல் மாதம் கருதப்படுவதினால் உல்லாசப் பயணிகளும் உள்நாட்டு பிரமுகர்களும் இங்கு அதிகமாகக் கூடுகின்றனர். நுவரெலியா "கோல்வ்" விளையாட்டுக்குப் பேர் பெற்றது. தேயிலைத் தொழிற்சாலைகளும் அம் மாவட்டத்தில் காணப்படுகின்றது. இலங்கையில் மிகவும் குளிரான பிரதேசமான இங்கு மேல் நாட்டு மரக்கறி வகைகளும் பயிரிடப்படுகின்றது.

**ஹக்கல** :- நுவரெலியா மாவட்டத்தில் அமைந்துள்ள இயற்கை வளம் மிக்க கவர்ச்சியான தாவரப் பூங்கா இங்குதான் அமைந்துள்ளது.

உல்லாசப் பயணிகளைக் கவரும் ஒரு தளமாகவும் இது கருதப்படுகின்றது. இப் பூங்காவில் வெளிநாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற அதிகமான பூவகைகள் காணப்படுகின்றது.

**6 ம் நாள் – 1999. 07. 24**

**பண்டாரவளை** :- இது இயற்கை வனப்புமிக்க பிரதேசமாகும் இங்கு தேயிலைத் தோட்டங்கள் பரந்து காணப்படுவதோடு சுவடுகள், பள்ளத்தாக்குகள் கணவாய்கள் போன்ற நில உருவங்களோடு மற்றும் பல நிலவுருவங்களையும் காண முடியும்.

இலங்கையின் சுகநலப் பிராந்தியமாக இது அரசினால் பிரகடனப்படுத்தப்பட்டது. இந்நகர், கடல் மட்டத்திலிருந்து 1200 M க்கு மேல் உயரம் கொண்டதாகக் காணப்படுகின்றது.

**பதுளை** :- இங்கு இலங்கையில் காணப்படுகின்ற நீர்வீழ்ச்சிகளில் ஒன்றான துங்கிந்த நீர் வீழ்ச்சி நகரிலிருந்து 3 KM இல் அமைந்துள்ளது.

**இங்கினியாகலை** :- 108 KM நீளமான கல்லோயா நதிக்கு குறுக்கே அணை கட்டப்பட்டு இங்கினியாகலை குளம் / சேனநாயக்க சமுத்திரம் உருவாக்கப்பட்டுள்ளது. இதன் பரப்பு 78 சதுர கி. மீற்றர்களாகும் 1949 ம் ஆண்டு இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட முதலாவது பலநோக்கு அபிவிருத்தித் திட்டம் கல்லோயா அபிவிருத்தித் திட்டமாகும். இத்திட்டத்தின் மூலமே இக்குளம் அமையப் பெற்றுள்ளது.

**அம்பாறை** :- கல்லோயா விவசாயக் குடியேற்றத் திட்டத்தின்கீழ் இந்நகர் உருவாக்கப்பட்டது. 2வது கம்உதாவ கண்காட்சி 1980 இல் இங்கு நடைபெற்றது.

STAR - Sainthamaruthu